புலிகளின் தாக்குதலுக்கு கடற்படை உள்ளாவதால்

# கடற்பாதை தமக்குப் பாதுகாப்பில்லை என்பதினால் தீவுப்பகுதிகளில் நடவடிக்கை

ஊர்காவற்துறைப்பகுதிக்கு அப்பால் தென்புறமாக இராணுவ நடவடிக்கை எடுக்குமுகமாக தீவுப்பகுதிகளில் தற்போது ஸ்ரீலங்காப்படையினர் குவிக்கப்பட்டிருக்கலாம் என பி.பி.ஸி நேற்றுத்தெரிவித்தது. அனலைதீவு, எழுவைதீவுப்பகுதிகளில் இராணுவத்தினர் இறக்கப்பட்டிருப்பதும் இந்நோக்கத்திற்காக இருக்கலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டது, ஏற்கனவே தீவுப்பகுதிகளில் பீரங்கி மற்றும் குண்டுவீச்சு நடப்பதாக பி, பி, ஸி சுட்டிக்காட்டியது. அண்மைக் காலத்தில் வடபகுதிக்கடலில் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் கடற்படையினரின் படகுகள் அழிக்கப்பட்டும் சேதம் அடைந்தும் உள்ளன. இதுபோன்ற சம்பவங்களினால் கடற்பாதை தமக்கு பாதுகாப்பில்லாமல் உள்ளதை உணர்ந்த படையினர் தீவுப்பகுதியில் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த விரும்பியிருக்கலாம் என பி.பி.ஸி தெரிவித்தது.

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 276 பிரசோற்பத்தி புரட்டாதி 30 (16 • 10 • 1991) புதன்

# சபாநாயகர் ராஜினாமா
# ஜனாதிபதி ஏற்க மறுப்பு!

## இரண்டு நாள்களுக்கு முன்பே ராஜினாமா சமர்ப்பித்தாராம்

சபாநாயகர் எம். எச் முஹமட் இராஜினாமா செய்துள்ளார் தமக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்த போதிலும் தமது பதவியை இவர் இராஜினாமாச் செய்துள்ளார்.

சபாநாயகர் தமது இராஜினாமாவை இருதினங்களுக்கு முன்னரே ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துவிட்டதாக இந்திய செய்திகள் தெரிவித்தன.

எனினும் ஜனாதிபதி சபாநாயகரின் இராஜினாமாவைபரிசிலனை செய்த பின் அவரின் இராஜினாமாவை ஏற்க மறுத்துவிட்டதாக மேலும் அச்செய்திகள் தெரிவித்தன.

சபாநாயகரின் இராஜினாமா குறித்து வேறு எந்த வட்டாரங்கள் மூலமாகவும் ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

சபாநாயகர் ஜனாப்

—04ஆம் பக்கம் பார்க்க

## மேஜர் ஸ்ரீ வீரமரணம்

15 10.91இல் எதிர்பாராத தக்குதல் சம்பவம் ஒன்றில் மேஜர் ஸ்ரீ (கனகராதா ஸ்ரீதரன் புத்தூர்

—04ஆம் பக்கம் பார்க்க

## ஷெல் தாக்குதல்

தீவுப்பகுதி கடற்பரப்பிலிருந்தும் நேற்று நள்ளிரவும் ஷெல் தாக்குதல்- பீரங்கித் தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளன.

—04ஆம் பக்கம் பார்க்க

## கைதடியில் ஹெலி சூடு

கைதடிச் சந்தியில் நேற்று மாலை 6-30 மணியளவில் அப்பகுதிக்கு வந்த ஹெலிகப்டரில் இருந்து திடீரென வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சேதவிவரம் தெரிவிக்கப்படவில்லை. 01

## யாழ்தேவி தடம்புரண்டபோது பயணிகளிடம் கொள்ளை!

கம்பஹாவில் சனிக்கிழமை இடம்பெற்ற யாழ்தேவி ரயில் விபத்தின் போது பல பயணிகளின் உடமைகள் கொள்ளையிடப்பட்டதாக விபத்தில் தப்பி வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

ரயிற் பெட்டிகள் தடம்புரண்டபோது காயமடைந்த, சிக்குண்ட பயணிகளைக் காப்பாற்றுவதுபோல அங்குவந்த பெரும்பான்மையினத்தவர்கள் சிலர் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிலமணி நேரத்தில் பொலிஸார் விபத்து நடந்த இடத்துக்கு வந்து அங்கு நின்றவர்களைக் கலைத்தனர்.

பகல் இரண்டு மணிக்கு மற்றொரு ரயில் மூலம் இப்பயணிகள் வவுனியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

—04ஆம் பக்கம் பார்க்க

## பதுங்கியிருந்த படையினர் மேல் அம்பாறையில் கிறனேட் வீச்சு

யாழ் மாவட்டத்தில் பெரிய நாட்டன் தேவன்துறைஎன்ற பகுதியில் உள்ள படையினரின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதாக நேற்று பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று அம்பாறை கல்லாறுப்பகுதியில் விடுதலைப்புலிகள் மீது பதுங்கியிருந்து தாக்குதல் நடாத்த

—04ஆம் பக்கம் பார்க்க

### வளரும் நாடுகள்

## இராணுவச் செலவைக்குறைக்க ஐ. எம். எவ். வற்புறுத்தல்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமது இராணுவச் செலவைக்குறைத்துக்கொள்ள வேண்டும் எனசர்வதேச நாணயநிதியமும், உலகவங்கியும் வற்புறுத்தியுள்ளன.

நேற்று பாங்கொக்கில் ஆரம்பமான இந்நிறுவனங்களின் கூட்டத்தில் நாணய நிதிய இயக்குநர் இதைத் தமது நிறுவனத்தின் ஓர்

—04ஆம் பக்கம் பார்க்க

## சபாநாயகர் ஆட்சேப மனு உயர் நீதிமன்றால் தள்ளுபடி!

ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்ததை ஆட்சேபித்து உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த வழக்கறிஞரான தர்மதாஸ ரூமலி என்பவரால் கடந்தவாரம் இம்மனு நீதி

—04ஆம் பக்கம் பார்க்க

### இலங்கை அரசு கூறுகிறது

## புதிய நிபந்தனைகள் ஏதும் ஐ. எம். எவ். விதிக்கவில்லை

இலங்கைக்கான நிதியுதவிக்காக சர்வதேச நாணய நிதியம் இருபது நிபந்தனைகளை விதித்துள்ளதாக வெளிவந்த செய்தி தவறானது என அரசு மறுத்துள்ளது.

குறிப்பிடப்படும் இருபது

—04ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதங்கள், ராணுவச்சடலங்கள் வன்னியில் மக்கள் பார்வைக்கு

முல்லைத்தீவு 3ஆம் கட்டை மினிமுகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும், இராணுவத்தினரின் சடலங்களும் வன்னி மாவட்டத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

தாக்குதலின் போது வீரமரணமடைந்த லெப். நேச

—04ஆம் பக்கம் பார்க்க

### 1988, 1989 ஜே. வி. பி. நடவடிக்கை

## கஷ்ட நிவாரண முற்பணம் வடகிழக்கு ஊழியருக்கு இல்லை

1988ஆம், 1989ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி நடவடிக்கை காரணமாக அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கஷ்ட நிவாரண முற்பணம் வடக்கு கிழக்குப்பகுதி அரச ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு திறைசேரி அறிவித்துள்ளதால் திணைக்களங்கள் இதற்கான ஆயத்தங்களை செய்து வந்தன.

ஆனால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி இராணுவ நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்

—04ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர் மீதான தாக்குதல் கடற்படைத்தளபதி மறுப்பு!

தமிழக மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்கவில்லை என ஸ்ரீலங்கா கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ மறுப்புத்தெரிவித்துள்ளார்.

கடற்படையினர் நிதானமாக நடந்து கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளதால் இத்தகைய சம்பவங்கள் நடை

—04ஆம் பக்கம் பார்க்க


## இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகள் குறித்துப் பேச்சு

தமிழக அகதி முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழரை மீண்டும் இங்குகொண்டு வருவது தொடர்பாக இந்தியத்தூதுவர் என், என் ஜாவும்

—04ஆம் பக்கம் பார்க்க

# கோண்டாவில் கிழக்கு
# அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான
# இரதோற்சவ சிறப்பிதழ்

## கீதை சொன்ன கண்ணன் இன்று தேரில் பவனி வருகிறான்



**16 - 10 - 91**

வைஷ்ணவ சம்பிரதாயத்தைக் கட்டிக் காப்பதற்கும் அதன் சித்தாந்தத்தை மேலோங்கச் செய்வதற்கும் இலங்கையில் இருக்கின்ற விஷ்ணு ஆலயங்களில் கோண்டாவில் கிழக்கில் அருட்குடி கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீவல்லீபுர நாதர் தேவஸ்தானமும் ஒன்றாகும்.

இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே மூன்று குடிகளை மட்டும் கொண்டிருந்த இவ்விடத்து அன்பர் ஒருவர் அச்செழுவு என்னும் இடத்திற்குச் சென்ற பொழுது அங்கிருந்த ஒரு அகழிக்கருகில் அசரீரி கேட்டபொழுது கண்டெடுத்த கற்சிலை ஒன்றை தன்னுடனேயே கொண்டு வந்து இங்கிருக்கிற ஒரு அரச மரத்தின் கீழ் வைத்து வழிபட்டதாயும், காலாகாலத்தில் மக்கள் வழிபாட்டிற்கு வரத் தொடங்கியதாயும் பின் ஓலையால் வேயப்பட்ட ஆலயமாகவும் தொடர்ந்து கல்லால் கட்டி ஓட்டினால் வேயப்பட்ட ஒரு மடாலயமாக இருந்ததாகவும் ஆலயத்திற்குத் தெற்குப் புறமாக ஒரு வேம்ப மரம் நின்றதாகவும் அதன் அடியில் பாம்புகள் குடிகொண்டதாகவும் மக்கள் அவைக்குப் பாலமுதம் வழங்கி நாக வணக்கம் செலுத்தியதாயும் உள்ள செய்திகளை காலவழிச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

காலஞ் செல்லச்செல்ல மக்கள் வல்லியப்பர் என்ற திருநாமமிட்டு வழிபட்டனர். அந்த ஆயிரநாமனை எப்பெயர் இட்டு அழைத்தாலும் அட்டடியே வருபவனாதலால் மக்கள் மெய்யன்புடன் வழிபட்டு வந்தனர். ஆலயத்தை உருவாக்குவதற்கு மூலகர்த்தாவாக இருந்த அவ்வன்பரின் வழித்தோன்றலின் ஆலயமாக இருந்த இவ்வாலயம் 1979 இல் இருந்து பொதுமையாக்கப்பட்டு அறங்காவற் குழு அமைக்கப்பட்டு பாலஸ்தாபனமும் செய்யப்பட்டது.

இவ்வூர் மக்களின் தாழாத உறுதியும் தளராத முயற்சியும் மேலானபக்தியும் காலஞ்சென்ற அமரர் உயர் திரு- சீதாராமசாஸ்திரிகள் அவர்களின் ஆசியும் இறைவனின் பெருங்கருணையும் ஸ்ரீ வல்லீபுரநாதர் எனப்பெயரிடப்பட்டு 1981 இல் மகாகும்பாபிஷேகம் செய்ய அருள் கூட்டியது.

6-வது மண்டலாபிஷேக தினத்து அன்று நாதஸ்வர இசைக்கு நாகமொன்று படமெடுத்து ஆடியதும் பின் அதுகருவறைக்குள் மறைந்த சம்பவமும் மக்களால் இன்றும் நினைவு படுத்துகிற விடயமாக உள்ளது மேலும் இக்கும்பாபிஷேகத்திற்குப் பால்தர மறுத்த குடியானவர் ஒருவரின் பசு தன் எஜமானுக்கே பால்தர மறுத்தமையால் அவர் தொடர்ந்து ஆலயத்திற்கு இன்றும் பால் வழங்கிவரும் விடயம் எல்லோரும் அறிந்ததே.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக அமையப் பெற்ற இவ்வாலயத்தில் கருவறை விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், தரிசன மண்டபம் அநந்தசயன ரங்கநாதர் ஆலயம், மகாலட்சுமி ஆலயம், ஆஞ்சநேயர் ஆலயம், நவக்கிரக மண்டபம் ஆகியவை அமையப் பெற்று ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக நின்ற கோல வரத ராஜமூர்த்த வடிவில் அருளுகின்ற இவ்வாலயத்தில் 1983 ஆம் ஆண்டு கலியுக வரதன் வேங்கடாசலபதி அவதார நாளான புரட்டாதித் திருவோணத்தைப் பட்சமாக வைத்து மகோற்சவம் இடம்பெற்றது மேலும் அவ்வருடமேயே சித்திரத்தேர் பவனி வந்தமை இவ்வூர் மக்களின் விடாமுயற்சியும் இறைவனின் பேரருளும் என்றுமே கூறவேண்டும்.

இங்கு புதுவருடப்பிறப்பு தசாவதார ஜெயந்தி தினங்கள் குறிப்பாக கிருஷ்ண ஜெயந்தியும் உறியடி உற்சவமும் ஆழ்வார் உற்சவங்கள், 10நாட்கள் கொண்ட மகோற்சவம், ஏகாதசி உற்சவங்கள். திருப்பாவை 30 நாட்கள் போன்றவை வருடாவருடம் கொண்டாடப்படுவதாயும் வைஷ்ணவ சம்பிரதாயத்தை வளர்க்கும் ஒரு ஆலயமாகவும் இது திகழ்கிறது இங்கு மக்கள் வருகைதந்து தீராத நோய்கள் எல்லாம் தீர்த்த வண்ணம் செல்கின்றனர்.

மேலும் கடந்த சில வருடங்களாகத் தடைப்பட்டிருந்த இவ்வாலயத் திருப்பணிவேலைகள் தற்பொழுது சிறிது சிறிதாக இடம்பெற்று சுற்றுக் கொட்டகை அமைக்கும் வேலையும் ஒரு பகுதி நிறைவுற்றுள்ளது.

இவ்வரும்பணிக்கு அன்பர்கள் பலர் பண உதவி புரிந்தனர். தொடர்ந்து ஆலயத் திருப்பணி வேலைகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மகோற்சவம் 13 ஆம் திகதி ஞாயிறு ஆழ்வார் பன்னிருவர் உற்சவத்துடனும், 14 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவுடனும், 15 ஆம் திகதி பகல் அநந்தசயன திருக்கோலத்துடனும், மாலை சப்பரத் திருவிழாவும் இடம்பெற்று இன்று காலை 10 மணிக்கு அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனாக வந்த அந்தப் பார்த்த சாரதி தானே தேரிற்பவனி வருகின்ற காட்சியை

''ஆரா அமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே''

என்று பக்தர் கூட்டம் அவனைப் பரவித் தொழுவதற்காக ''மத்தகத்திடை கைகளைக் கூப்பிப் போகின்ற காட்சி நம்பன் போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் தீருகின்ற அருங்காட்சியாகத் தெரிகின்றது.

''அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று பக்தர்கள் பரவசமடைகிறார்கள்

தொடர்ந்து நாளை 17 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும், 18 ஆம் திகதி திருக்கல்யாண வைபவமும், 19 ஆம் திகதி ஆஞ்சநேயர் பொங்கலுடனும் மகோற்சவம் இனிது நிறைவுறுகிறது.

''கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே''

தொகுப்பு: எஸ். கே. என். தவராஜா
(யாழ் பல்கலைக்கழகம்)

இரதோற்சவ விழா சிறக்க
வாழ்த்துவோர்

**அஜந்தாஸ் பிடவை மாளிகை**
பெரிய கடை, யாழ்ப்பாணம்

**யூனிபெக்ஸ் வீடியோ**
கோண்டாவில் வடக்கு

**கரன் பிடவை நிலையம்**
திருநெல்வேலி சந்தி

**க. செல்லப்பா**
குடும்பத்தினர்

**அ. தவம்**
பலசரக்கு வியாபாரம்
பலாலி வீதி,
கோண்டாவில்

**நிரு கல்வி நிலையம்**
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு

**இராசமணி களஞ்சியம்**
பலசரக்கு வியாபாரம்
ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு

**L. G. லிங்கநாதன் அன் கோ**
பெரிய கடை, யாழ்ப்பாணம்

சிறப்புமலர் ஏற்பாட்டாளர்கள்:-
செ. சண்முகலிங்கம், செ. விசுவலிங்கம்.

10012

## தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளில் முதற் பகுதியினர்

# மாதமுடிவில் மன்னார் வந்தடைவர்

தற்பொழுது தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களில் ஒரு தொகையினர் இம் மாத முடிவில் மன்னாருக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இந்தியத் தூதுவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் ஜனாதிபதியின் வெளியுறவுச் செயலரைச் சந்தித்து பேச்சு நடாத்தியதையடுத்து இதற்கான இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தொகுதி, தொகுதியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர்.

## அனுராதபுரம் நீதவான் பிணையில் செல்ல அனுமதி

அனுராதபுரம் நீதவான் பிரியங்கரா பெர்னாண்டோ விடம் இருந்து தனது மூன்று மாதப் பெண் குழந்தைக்கு 6000 ரூபா ஜீவனாம்சம் கோரி முன்னாள் நீதவான் செல்வி சிதாலங்கம கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்:

பிரதிவாதியான அனுராதபுரம் நீதவானுக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளதையடுத்து அவர் சட்டத்தரணி ஒருவர் மூலம் நீதிமன்றில் ஆஜரானார்.

அனுராதபுரம் நீதவானை 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த கொழும்பு மேலதிக நீதவான் அவரை வெளிநாடு செல்ல அனுமதியளிக்க வேண்டாம் என குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். 08

## பிரதம நீதியரசராக சில்வா

பிரதம நீதியரசராக ஜி. பி. எஸ். சில்வா நேற்று பதவியேற்றார் கடந்த ஒக்டோபரில் பதவியேற்ற எஸ். டி தம்பையா இருமாதங்களில் ஓய்வு பெற்றதையடுத்து சில்வா பிரதம நீதியரசராக பதவியேற்றார்.

## புத்தளம் வைத்திய அதிகாரி விடுதியில் மர்ம மரணம்

புத்தளம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி மஹிந்த வகல தந்திரி மர்மமான முறையில் அவரது விடுதியில் இறந்து கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

38 வயதுடைய இந்த வைத்திய அதிகாரி தனது படுக்கையில் காலையில் மரணமடைந்து காணப்பட்டார்

முதல்நாள் இரவு இவரை ஒருவர் வந்து சந்தித்ததாகவும் அதிகாலை அவர் மர்மமாக மறைந்துவிட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

வைத்திய அதிகாரியின் சடலம் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்ப மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

## குழந்தையுடன் சென்ற பெண் கொலை; அவர் தங்கச்சங்கிலியும் அபேஸ்

வீதியில் குழந்தையுடன் சென்ற பெண்மணியொருவர் கொலை செய்யப்பட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்ட சம்பவமொன்று நெடுங்கேணியில் நடந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

முள்ளியவளையிலிருந்து நெடுங்கேணியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இவரின் சடலம் நெடுங்கேணிக்கு அருகிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

## குடும்பத்தலைவர்களை இழந்தவர்க்கு மட்டு மாவட்டத்தில் ஆசிரிய நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்செயலினால் உழைப்பாளிகளை இழந்த குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒருவர் வீதம் ஆசிரிய நியமனம் வழங்கப்பட உள்ளது.

இதற்காக 300 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களது பெயர் விவரப்பட்டியல் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தால் வடக்கு கிழக்கு மாகாண சபையின் பரிசீலனைக்கென அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை தொண்டர் ஆசிரியர்கள் 40பேரது பெயர்ப் பட்டியலை கல்விச் சேவைகள் ஆணைக்குழு விசாரணைக்கென மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திடம் அனுப்பி வைத்துள்ளது (08)

## தமிழோசை ஆனந்திக்கு தமிழீழம் வர அனுமதி இல்லை

தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள லண்டன் 'தமிழோசை'யைச் சேர்ந்த ஆனந்தி சூரிய பிரகாசன் வடக்குக், கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்ய அனுமதி கோரியுள்ள போதிலும் அதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சினால் இன்னும் வழங்கப்படவில்லை என அறியப்படுகின்றது.

இலங்கையரான ஆனந்தி முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றியவர். 1972-ல் லண்டன் சென்ற ஆனந்தி அங்கு தமிழோசையில் இணைந்து கொண்டார்.

கொழும்பு வருவதற்கு முன் தமிழகம் சென்ற ஆனந்தி அங்கு இந்தியாவின் முதற் பெண் பிரதம நீதியரசர் முதல் வீதியோரத்து விபச்சாரிவரை பலரை 'மங்கையர் மாத' நிகழ்ச்சிகளுக்காகப் பேட்டி கண்டுள்ளார். இவர் இங்கிருந்து இதே பணிக்காகச் சிங்கப்பூர், மலேசியா உட்படப் பல நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

## 'ஏஞ்சலா' போட்டிகள்

ஈச்சமோட்டை சன சமூக நிலையத்தின் அனுசரணையுடன், ஈச்சமோட்டை மகளிர் முன்னேற்றச்சங்கம்நடாத்தும் வீரவேங்கை 'ஏஞ்சலா' ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்கான வலைப்பந்தாட்டப் போட்டி ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து ஒவ்வொருநாளும் இப்போட்டி நடைபெறவுள்ளது, இறுதிப் போட்டி எதிர்வரும் 19-ம்திகதிநடைபெறும்.

ஆரம்பநாள் வைபவத்தில், யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு எஸ் அண்ணாத்துரை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாய முறைப்படிபோட்டியை ஆரம்பித்து வைத்தார் கப்டின் டீ ஏ. எம். குணசிங்கம் திருமதி அண்ணாத்துரைக்கு வீராங்கனைகளை அறிமுகம் செய்து வைத்தார். (16)

## 'தமிழமுதம்' வானொலிஒலிபரப்பு 20-ம் திகதி பாரீஸில் ஆரம்பம்

பிரான்ஸ்-பாரீஸில் இருந்து 'தமிழமுதம்' என்ற புதிய தமிழ் ஒலிபரப்பு ஒன்று எதிர்வரும் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஒலிபரப்பப்படவுள்ளது.

பாரீஸின் பண்பலை 95 6 அலைவரிசையில் பிற்பகல் 4 மணியிலிருந்து 5 மணிவரை ஒவ்வொரு ஞாயிறும் இந்த ஒலிபரப்பு இடம்பெறும்.

பிரான்ஸிலுள்ள இலங்கைக் கலையகத்தினால் நாடத்தப்படவுள்ள 'தமிழமுதம்' ஒலிபரப்பில் மெல்லிசை, திரையிசை, வில்லிசை, நாடகம் போன்றவை ஒலிபரப்பப்படவுள்ளன.

## சட்டவைத்திய அதிகாரி முன்

### சந்திரசேகரனை ஆஜர்செய்யஉத்தரவு

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனை உடனே சட்ட வைத்திய அதிகாரியின் முன் ஆஜர் செய்து தாமதமில்லாது நவம்பர் 8-ம் திகதிக்கு முன்மன்றில் சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் குற்றப் புலனாய்வுத்துறை இயக்குநர் கொட்பிரே குணசேகராவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சந்திரசேகரனின் மனைவியால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு விசாரணையின் போதே நீதிபதி இவ் உத்தரவினை வழங்கினார்.

## நாதஸ்வர மேதை என்.கே. பத்மநாதன் மணிவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

இடம் :- நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம்

தலைவர்:

திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்
(கல்வியதிபதி வடமாநிலம்)

3 00 - 4 . 00 மணி மங்கள இசை
திருவாளர்கள்
வி. கே. பஞ்சமூர்த்தி கே. நித்தியானந்தம்
எம். பி. நாகேந்திரம் ரி. உதயசங்கர்
என். ஆர். எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுதாகரன்

4 . 00 - 4 . 30 மணி : பல்லியம்
இளங்கலைஞர் மன்றம்

தலைமையுரை:

4 30 - 5 . 30 மணி: தொடக்கவுரை :
பேராசிரியர் செ சிவஞானசுந்தரம் (நந்தி)

அருளாளர் வாழ்த்து :
மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள்
(மாவை ஆதீனம்)

ஆன்றோர் வாழ்த்து:
திரு. க. சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள்

அறிஞர் வாழ்த்து:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(கலைப்பீடாதிபதி யாழ் பல்கலைக் கழகம்)

கலைஞர் வாழ்த்து:
திரு. குழந்தை சண்முகலிங்கம் அவர்கள்
(விரிவுரையாளர் நுண்கலைத்துறை யாழ் பல்கலைக்கழகம்)

கவிஞர் வாழ்த்து:
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கள்

சுவைஞர் வாழ்த்து:
திரு பொன். மதிமுகராசா அவர்கள்

5 . 30 - 6 . 30 மணி: இசையரங்கு
திரு. திலகநாயகம் போல் அவர்கள்

6 . 30 - 7 . 30 மணி ; திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்கள்

7. 30 - 9 . 30 மணி : பட்டி மண்டபம்
பொருள்: ''பெண்மை ஆற்றலில் பெரிதும் சிறந்தவள் சீதையா? கண்ணகியா?''
திரு ஏ. ரி பொன்னுத்துரை பி. ஏ.
திரு. க. நாகேஸ்வரன் எம். ஏ.
திரு.க. குமாரதாசன் திரு. ஆ. திருமுருகன்
திரு. த சிவகுமாரன்
திரு. தி. திருநந்தகுமார்

நடுவர்:- திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(கம்பன் கழகம்)

நன்றியுரை:

## இராணுவத்தின் புனர்வாழ்வுக்கு 50 லட்சம் ரூபா நிதி!

இராணுவத்தினரின் புனர்வாழ்வுக்கென 50 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஜனசக்தி நிதியத்துக்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து 45 லட்சம் ரூபாவும், ஜனாதிபதி நிதியத்திலிருந்து 5 லட்சம் ரூபாவும் இராணுவத்தினரின் புனர்வாழ்வுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

## யாழ்தேவி ரயில் விபத்தினால் 15 லட்சம் ரூபா நஷ்டம்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை வியாங்கொடைக்கு அருகில் இடம்பெற்ற யாழ்தேவி ரயில் விபத்தினால் புகையிரதப்பகுதிக்குப் பதினைந்துலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த ரயில் விபத்துப் பற்றி புகையிரதப்பகுதி முழு அளவிலான விசாரணையை ஆரம்பித்துள்ளது.

## இல்லப் போட்டிகள்

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் இயங்கும் கோப்பாய்த் தொகுதி தொலைக்கல்வி பயிலுநர் ஆசிரியர்களின் இல்ல விளையாட்டுப் போட்டி கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## தடைமுகாமில் நால்வர் கைது

கொழும்பிலிருந்து கற்பூரம் கொண்டு வந்த நால்வர் தாண்டிக்குளத்தில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தாலி கொள்ளை

வெள்ளவத்தையில் வீதியால் சென்ற பெண்ணிடம் தாலிக்கொடி கொள்ளையடித்த சம்பவம் ஒன்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாமன் கடையைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வெள்ளவத்தை கிளிபட் பிளேஸ் வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த இருவர் திடீரெனப் பாய்ந்து தாலியை அபகரித்ததாக வெள்ளவத்தைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இத் தாலிக்கொடியின் பெறுமதி 96 ஆயிரம் ரூபாவெனவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## அரச தாதிமார்களுக்கு விரைவில் சம்பள உயர்வு

அரசாங்க தாதிமார்களுக்கு விரைவில் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது. சுகாதார மகளிர் விவகார அமைச்சு இந்தச் சம்பள உயர்வுக்கான சிபார்சினை அமைச்சரவைக்கு வழங்கியுள்ளது.

மணி விழாவில் புதுவை ரத்தினதுரை

# கலைஞர்களின் போராட்டப் பங்களிப்பு

# எதிர்பார்த்த அளவுக்கு இல்லை!

"கலைஞர்கள் நம் நாட்டின் செல்வங்களே, அவர்கள் போற்றப்பட வேண்டியவர்களே. ஆனால் எமது மண்ணில் கலைஞர்களின் பங்களிப்பு நாம் எதிர்பார்த்தது போலல்லாது மிகக் குறைவாகவே உள்ளது கவலை தருகிறது"

இவ்வாறு நேற்று மாலை நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற என். கே. பத்மநாதனின் மணிவிழாவில் தலைமையுரையாற்றிய விடுதலைப் புலிகள் கலைப்பண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர் புதுவை ரத்தினதுரை தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் "இந்திய இராணுவம் எமது மண்ணில் இருந்த போது செய்த அட்டூழியங்களை நம் கலைஞர்கள் கவிதை பாடவில்லை, பரணி எழுதவில்லை. எமது எதிர்காலச் சந்ததி கலைஞர்களைப் பார்த்து நீங்கள் போராட்டத்திற்கு என்ன பங்கு அளித்தீர்கள் என்பது கேட்டால் என்ன பதில் அளிக்கவுள்ளீர்கள்?

'நமது மண்ணில் நடந்த மிகப்பெரும் போரான ஆனையிறவு யுத்தத்தில் போராளிகள் அக்லாத பலர் வாகனம் ஓட்டும் போது குண்டு வீச்சில் பலியாகினர்.

அக்காலத்தில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் தத்தித் தோட்ட வெருளி, பருத்தித்துறை பாற்காரி போன்ற பாடல்களை வடித்தார். அவர் தற்போது இருந்திருந்தால் நிச்சயமாக நமது போராட்டத்திற்கு மிகப்பெரும் பங்களித்திருப்பார்" என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா, விடுதலைப் புலிகள் செயலதிபர் யோகி, வண. பிதா ஜோசப் அடிகள் ஆகியோர்கள் உரையாற்றினர் 01

## ஆசிரியை விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 11 மாதமாக விளக்கமறியலில் இருந்த வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியை வேலுப்பிள்ளை-சரோஜாவை (28) கொழும்பு மேல் நீதி மன்ற நீதவான் ரி. பி. உணம் புவ விடுதலை செய்தார்.

இந்த ஆசிரியையின் உறவினர்கள் இது தொடர்பாகத் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணையின் பின்னர் நீதிபதி தீர்ப்பளித்தார். 03

ஐ. தே. க. எம். பி. கேள்வி

## அனுராபண்டாரநாயக்கா புலிகளுடன் பேசியது சரியா

ஜனாதிபதி விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடாத்தியதாகக் கூறும் எதிர்க்கட்சியினர் 1988இல் வவுனியாக் காட்டில் அனுராபண்டாரநாயக்கா புலிகளுடன்பேசியது பற்றி மௌனம் சாதிக்கின்றனர்.

இவ்வாறு கேகாலை மாவட்ட ஐ. தே. க. எம். பி. ஆர். ஏ. டீ. சிறிசேனா தெரணியகலவில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

ஜனாதிபதி பிரேமதாஸ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடனேயே விடுதலைப்புலிகளுடன் பேசினார். ஆனால் ஸ்ரீமாவோ அம்மையார்1988ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு தருமாறுகேட்டுப் புலிகளுடன் பேசினார் என்றும் அவர் குறிப்பிட்டார்

தொடர்ந்து பேசிய அவர், காமினி திஸநாயக்காவும் இந்தியப்படை இங்கு வர ஆதரவாக இருந்தவர் இவர் தேசப்பற்றாளரா, இந்தியப்படை வந்ததால் நாட்டில் நிகழ்ந்த சம்பவங்கள் என்ன என்று தெரியும் தானே என்றார் 08

## அமைச்சர் உத்தரவு

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற யாழ்தேவி ரயில் விபத்துக் குறித்து விசாரணை நடாத்துமாறு போக்குவரத்து அமைச்சர் விஜயபால மென்டிஸ் ரயில்வே பகுதி அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

## சாவகச்சேரியில் ஹெலி சூடு கர்ப்பிணிப் பெண் பலி

சாவகச்சேரி சங்கத்தானையில் நேற்று மாலை 6. மணியளவில் ஹெலி ஹொப்டர் வட்டமிட்டு கனும் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டதில் வீட்டுக்குசினியில் பாதுகாப்புத்தேடிநின்ற இளம் கர்ப்பிணிப் பெண் மரணமானார்

சங்கத்தானை கிரேசனடியைச் சேர்ந்த இரு பிள்ளைகளுக்குத்தாயான திருமதி சிவகௌரி ஜெகதீஸ்வரன் (28) என்பவரே மரணமானவராவர்.

அப்பகுதியில் சில வீடுகளும் துப்பாக்கிப்பிரயோகத்திற்கு இலக்காகின. (07)

## றபர் சீற் மூலமாக பெற்றோல் கடத்திய பெண்

குழந்தையை படுக்க வைக்கும் றபர் சீற்றின் மூலம் பெற்றோலை யாழ்ப்பாணம் கடத்த முயன்ற பெண்மணி ஒருவர் வவுனியாவில் படையினரின் சோதனையின் போது வசமாக அகப்பட்டார்.

இப்பெண்மணி பிளாஸ்ரிக் துணியில் தயாரிக்கப்பட்ட றபர் சீற்றினுள் பெற்றோலை விட்டு அதனைத் துவாயினால் மூடி அதன் மேல் குழந்தையை படுக்க வைத்துக் கொண்டுவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண் பின்னர் படையினரால் தாக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 06

## கெல்ற் மாணவர்களுக்கு கொடுப்பனவு கிடைக்கும்

1990-91 இல் யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி "கெல்ற்" ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கு சமுகமளித்த மாணவர்களுக்கு பயிற்சி பணக்கொடுப்பனவு வழமை போல் வழங்கப்படும் என யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அ. துரைராஜா நேற்றுத் தெரிவித்தார்.

இம் மாணவர்கள் கெல்ற் வெளிக்களப் பயிற்சிக்குச்செல்லாமலே பணம் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பணக்கொடுப்பனவு வழங்கப் படமாட்டாது என முன்பு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (01

## திருமலை தமிழ்ப்பயணிகள் கொழும்பில் பெரும் அவதி

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு அதிகாலை 5மணிக்கு புகையிரதம் புறப்படுவதால் அதில் பயணம் செய்யும் தமிழ்ப் பயணிகள் மேலும்பல அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்

முன்னர் இந்தப்புகையிரதம் காலை 6மணிக்கு புறப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அதிகாலையில் இந்தப் புகையிரதம் புறப்படுவதால் 4மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திற்கு இப்பயணிகள் படுக்கையில் உடமைகளை இழக்கநேரிடுவதாகத்தெரிவிக்கப்படுகிறது. 08

## விக்டர் நினைவு தினம் மன்னாரில் அனுஷ்டிப்பு

மாவீரன் லெப். கேணல் விக்டரின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் மன்னார் மாவட்டத்தில் அனுஷ்டிக்க பட்டது

மடு, பண்டிவிரிச்சான், அடம்பன், பூநகரிப்பகுதிகளில் நினைவு நாளையொட்டி விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

### தமிழக...

பெறக் கூடிய சாத்தியமில்லை என ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 24 தமிழக மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால தாக்கப்பட்டது குறித்து இந்தியா தெரிவித்த புகாருக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### சபாநாயகர்...

மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

புதிய பிரதம நீதியரசர் எஸ். டி சில்வா தலைமையிலான மூன்று பேரடங்கிய நீதிபதிகள் குழுவொன்று நேற்று மனுவை ஆராய்ந்து அவ்வழக்கைத்தள்ளுபடி செய்தது.

### இராணுவச்...

நிபந்தனையாகவே குறிப்பிட்டார்.

வளரும் நாடுகளே இராணுவச்செலவைத் தற்போது அதிகரித்து வருகின்றன என அவர் அப்போது சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா அரசு இம்முறை தனதுநிதி ஒதுக்கீட்டின் 25 சதவீதத்தை பாதுகாப்புச் செலவாக ஒதுக்கியுள்ளமை தெரிந்ததே.

### பதுங்கியிருந்த..

முயன்ற விசேட அதிரடிப் படையினர் மீது புலிகள் குண்டுத் தாக்குதல் நடாத்திவிட்டு தப்பிச் சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### சபாநாயகர்ராஜி –

ஹனீபா முஹமட் 14 ஆவது சபாநாயகர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவிலிருந்து...

ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிறட்மன்வீரக்கோனும் பேச்சு நடாத்தியுள்ளனர்.

இம்மாத இறுதியில் அகதிகளை மன்னார்த் தீவுக்கு கொண்டுவந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பும் பேச்சுத்களில் ஆராய்ந்ததாககொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

### கஷ்ட...

பட்டுள்ளதாகவும். நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டத்திற்குப் பின்னரே இதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டு இவ்வாண்டு முடிவில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் வடக்குக் கிழக்குப் பகுதி அரச ஊழியர்களுக்கு கிடைக்கும்எனவும் தெரிவிக்கப்படுகிறது. 07

### யாழ் தேவி...

அந்த ரயிற் பெட்டிகளில் வெளிச்சம் எதுவும் இருக்கவில்லை எனவும் வந்தவர்கள் தெரிவித்தனர்.

அதிகாலை 2 மணிக்கு வவுனியாவுக்கு அந்த ரயில் வந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 01

### மேஜர் ஸ்ரீ

மேற்கு) வீரமரணமடைந்தார் இவரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக நீர்வேலி காமாட்சி சனசமூக நிலையம், அருகில் உள்ள பாடசாலை, அச்சுவேலி பஸ் நிலையம் புத்தூர் மாவீரர் மண்டபம் ஆகிய இடங்களில் வைக்கப்படும்.

### ஆயுதங்கள்...

னின் புகழுடல் முள்ளியவளையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் இராணுவத்தினரின் சடலங்களும் கிளிநொச்சி பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. 07

### ஷெல்தாக்குதல்...

காரைநகரிலிருந்தும் நேற்று முன்தினம் இரவு பொன்னாலைப் பகுதிகளை நோக்கி ஷெல்த்தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன,

இதனால் இப்பகுதிகளிலும் மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் சென்று வருகின்றனர். 07

### புதிய...

நிபந்தனைகளை அரசு ஏற்கனவே நிறைவேற்றியுள்ளதாகவும் நடப்பு வரவுசெலவுத் திட்ட ஆரம்பத்தின் போதே பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. எனவே புதிதாக எந்த நிபந்தனையையும் இப்போது அரசு எதிர்கொள்ளவில்லை என அரசு தெரிவித்துள்ளது.

## தீவக நலன் காக்கும் பிரிவு புகையிரத நிலையத்தில் அமைவு

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வருகின்ற மக்களின் நலன்கருதி நலன்காக்கும் பிரிவு அலுவலகம் யாழ் புகையிரத நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது

இடம் பெயர்ந்துள்ளவர்கள் தமது பெயர் விவரங்களை பதிவுசெய்யுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோண்டாவில் மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களும் தமது பெயர் விவரங்களை பதிவு செய்யலாம்.

இவர்களுக்கு அரச, அரச சார்பற்ற அமைப்புக்களும் பொதுமக்களும் துரிதமாக செயலாற்ற முன்வரவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## வடக்கே தபால் பார்சலுக்கு தபால் திணைக்களம் தடை!

தென்பகுதியில் இருந்து பலர் வடக்கே தபால் பார்சலில் சவர்க்காரம், கற்பூரம் நுளம்புத்திரி, சின்சோ பைக்கற்றுக்களை அனுப்புவது அதிகரித்துள்ளதையடுத்து தபால் திணைக்களம் அதற்கு தடை விதித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தபால் திணைக்களம் தடை விதித்தும் சில தபால் ஊழியர்கள் இவற்றை இரகசியமாக அனுப முற்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வடக்கே வரவிருந்த பல பார்சல்கள் கொழும்பில் தபால் பைகளில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், செயலகம் என்பனவற்றில் நிலவும் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான அனுமதி கொழும்பிலிருந்து கிளிநொச்சிச் செயவகத்திற்கு கிடைத்துள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் பத்திரிகைகள் மூலம் கோரப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 16 10-91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.